**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. THIMMARAYASWAMY ENTERPRISES, ROUGH STONE AND GRAVEL QUARRY LEASE OVER AN EXTENT OF 1.50.0 HEC AT S.F. NO. 305/3B (PART) AND 313/1, BERIGAI VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 07.05.2025 AT 11.00 AM AT M/S. P.V.R – L.M.R KALYANA MANTAPAM, NO. 344/1, 344/2, BERIKAI VILLAGE, THEERTHAM ROAD, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.A.Priyanka I.A.S | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Hosur, Krishnagiri District |
| 3 | Er. A. Jothiprakash | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Hosur, Krishnagiri District |
| 4 | Thiru.NagarajaReddy | : | The Proprietor<br>M/s. Thimmarayaswamy Enterprises |
| 5 | Thiru.Vijayaragavan | : | EIA Consultant,<br>M/s. Geo Technical Mining Solutions,<br>Dharmpauri |
| | Public | : | 83 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. Thimmarayaswamy Enterprises, lease over an extent of 1.50.0 Ha SF.No.

305/3B (Part) and 313/1, Berigai Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dina Thanthi" sand "The New Indian Express" dated 29.03.2025 and pamphlets regarding public hearing was issued to the public of Berigai Village with audio announcement through auto vehicle in and around the village. Further, he informed that the EIA consultant, representative for the proposed project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority - Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the EIA consultant, representative for the proposed project proponent to explain about their proposed Rough Stone and Gravel quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.Vijayaragavan, EIA Consultant, M/s. Geo technical Mining Solutions, Dharmapuri of the proposed Rough Stone and Gravel quarry project has made presentation about the proposed Rough Stone and Gravel quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough Stone quarry project.

The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Anumanthapa. Berigai Village:**

Thiru. Anumanthapa has said that this proposed project will bring employment to around 50 people. Water should be sprinkled on the roads using sprinklers during the movement of trucks. The quarry management has assured that, they will provide the blue metal jelly and M Sand in concessional rate to the local public and also informed that they will financially support the temple works. In addition to that, even though his land is located near the quarry there is no issues for operating the quarry.

**2. Thiru. N.Ashok, Berigai Village:**

Thiru N.Ashok has informed that many people get employment opportunity through this proposed quarry project, and this will improve the standard of living of families residing in this village..

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority – Tamilnadu.

Further, is no petition was received on the proposed M/s.Thimmarayaswamy Enterprises, project during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, from the public and no E-mail representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, on the proposed Rough Stone and gravel quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

12/5/2025

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

A. Jothi
12/5/25

12/5/25

**Sub Collector**
**Hosur**

2/7

17/5/25

**District Collector**
**Krishnagiri**

2/7

**திரு.திம்மராயசாமி என்டர்பிரைசஸ், சர்வே. எண். 305/3B (பகுதி) மற்றும் 313/1 பேரிகை கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி –1.50.0 ஹெக்டேர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 07.05.2025 அன்று எண். 344/1, 344/2 – இல், தீர்த்தம் மெயின் ரோடு, பேரிகை கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள திரு. பிவிஆர் & எல்எம்ஆர் கல்யாண மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.A. பிரியங்கா I.A.S | : | சார் ஆட்சியர், ஓசூர்<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.மு. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.அ. ஜோதி பிரகாஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு.நாகராஜரெட்டி | : | உரிமையாளர்<br>திரு. திம்மராயசாமி என்டர்பிரைசஸ், |
| 5 | திரு. விஜயராகவன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>திரு. ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூஷன், தருமபுரி |
| | பொதுமக்கள் | : | 83 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். திம்மராயசாமி என்டர்பிரைசஸ் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர் பொதுமக்கள் மற்றும் தி/ள். திம்மராயசாமி என்டர்பிரைசஸ் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 29.03.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், பேரிகை கிராமம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். திம்மராயசாமி என்டர்பிரைசஸ் உரிமையாளர் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். திம்மராயசாமி என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. விஜயராகவன், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூஷன், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. அனுமந்தப்பா, பேரிகை கிராமம்: (தெலுங்கு – இல் பேசினார்)**

திரு. அனுமந்தப்பா அவர்கள், இக்குவாரியினால் சுமார் 50 நபர்களுக்கு வேலை கிடைக்கும் என்றும், குவாரியின் கனரக வாகனங்கள் செல்லும் போது தண்ணீர் தெளித்து இயக்க வேண்டும் என கூறினார், இக்குவாரியின் நிர்வாகத்தினர் உள்ளூர் மக்களுக்கு ஜல்லி மற்றும் மணலை குறைந்த விலையில் தருவதாகவும் மற்றும் கோவில் பணிகளுக்கு உதவுவதாகவும் அவருடைய நிலம் குவாரியிக்கு அருகாமையில் அமைந்திருப்பதாகவும் குவாரியினால் எவ்வித பாதிப்பும் இல்லை என தெரிவித்தார்.

**2. திரு.N. அசோக், பேரிகை கிராமம்:**

திரு. N. அசோக் அவர்கள் இக்குவாரியை துவங்குவதில் எவ்வித பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்தார். மேலும், இக்குவாரியின் இயக்கத்தினால் உள்ளூர் மக்களுக்கு வேலை கிடைக்குமென்றும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பலன்பெறும் என்றும் கூறினார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு/ள். திம்மராயசாமி என்டர்பிரைசஸ் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் போது பொதுமக்களிடமிருந்து மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

மேலும், திரு/ள். திம்மராயசாமி என்டர்பிரைசஸ், உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை. மின்னஞ்சல் மூலமாக எதுவும் பெறப்படவில்லை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

**சார் ஆட்சியர்**
**ஓசூர்**

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**